சுருக்கம்

பள்ளிக்கல்வி - பொது நூலகங்கள் - 2021-2022-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு - கன்னிமாரா பொது நூலகத்தை நவீனமயமாக்கல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (பொ.நூ.2) துறை

அரசாணை (2 டி) எண். 28

நாள் 25.10.2021.
திருவள்ளுவராண்டு, 2052,
பிலவ வருடம், ஐப்பசி 08.

படிக்கப்பட்டவை :-

1. பொது நூலக இயக்குநரின் கடித ந.க. எண்.2397/உ_2/ 2020, நாள் 13.05.2020 மற்றும் 01.06.2021.
2. பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.43-இல் 2021-2022-இல் மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் அறிவிப்பு.

-------

ஆணை:-

2021-22-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்:-

> "1896-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கன்னிமாரா பொது நூலகம் இந்தியாவில் உள்ள பழமையான நூலகங்களுள் ஒன்றாகும். இந்தியாவின் தேசிய வைப்பு நூலகமாகச் செயல்படும் இந்நூலகம் நாடு முழுவதும் வெளியாகும் அனைத்து நாளிதழ், பருவ இதழ்களில் ஒரு பிரதியை இலவசமாகப் பெற்று வருகிறது. இந்நூலகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அதன் பாரம்பரிய நிலை மாறாத வகையில் ரூ.3.20 கோடி செலவில் மேம்படுத்தப்படும்."

2. மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட பொது நூலக இயக்குநரின் கடிதங்களில், கன்னிமாரா பொது நூலகத்தில் மின் கசிவு ஏற்படின், எளிதாக தீ விபத்து ஏற்பட்டு பொருட்சேதம் மற்றும் உயிர்ச்சேதம் ஏற்படும் வாய்ப்புகள் அடிக்கடி ஏற்படும் என்றும், குறைந்த மின் அழுத்தம் காரணமாகவும், ஒயர்கள் குறைந்த மின் இயக்கியாக இருப்பதாலும் ஒயர்கள் எரிந்து மதிப்புமிக்க மின் உபகரணங்களாகிய சர்வர், UPS, குளிர்சாதனக் கருவிகள் மற்றும் கணிப்பொறிகள்

//த.பி.பா.//

ஆகியவை பழுதடைந்து விடும் நிலையினைக் கருத்தில் கொண்டும், இந்நூலகத்தைப் பயன்படுத்தி வரும் வாசகர்களின் நலன் மற்றும் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு நூலகத்தின் பெரும் மதிப்புமிக்க பொருள்கள் பாதுகாப்பினை உறுதி செய்திட கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்திலுள்ள மின்சார இணைப்புகளை பொதுப்பணித் துறை மூலம் சீர்செய்வதற்கு நடப்பு ஆண்டு (2020-2021) விலை விகிதத்தின் அடிப்படையில், பொதுப்பணித் துறையின் திட்ட மதிப்பீட்டின்படி மதிப்பீட்டுத் தொகை ரூ.3,19,50,000/- என கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு பொது நூலக இயக்குநர் கோரியுள்ளார்.

| | | |
|---|---|---|
| Provision of HT supply arrangements with Two No's 500 KVA Transformers and allied works at CPL, Egmore, Chennai - 8 | : | Rs. 1,80,00,000 |
| Renewal of Distribution boards and Lighting Power Panels along with APFC Panels at CPL | : | Rs. 38,50,000 |
| Renewal of Split AC at various places at CPL | : | Rs. 35,50,000 |
| Rewiring and renewal of fittings and electrical installations at various places at CPL | : | Rs. 65,50,000 |
| **Total =** | : | **Rs. 3,19,50,000** |

3. பொது நூலக இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2021-2022-ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பான கன்னிமாரா பொது நூலகத்தை நவீனமயமாக்கல் என்ற அறிவிப்பினை செயல்படுத்திட கன்னிமாரா பொது நூலகத்தைப் பயன்படுத்தி வரும் வாசகர்களின் நலன் கருதியும், நூலகத்தின் மதிப்புமிக்க மின்சாதனங்கள் பழுதடையாத வண்ணம் இருக்கவும், கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்திலுள்ள மின்சார இணைப்புகளை பொதுப்பணித் துறை மூலம் சீர்செய்வதற்கு ரூ.3,19,50,000/- (ரூபாய் மூன்று கோடியே பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேலே பத்தி 2-ல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, செலவினத்தை அரசு நிதியிலிருந்து பெற்று அப்பணியை மேற்கொள்ள பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:-

"2205-00 கலையும் பண்பாடும் - 105 பொது நூலகங்கள் - மாநிலச் செலவினங்கள் - AB கன்னிமாரா பொது நூலகம் - 318 - பராமரிப்பு - 02 சிறப்பு பராமரிப்பு"

(ததொகு.2205 00 105 AB 31802)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (NEW INSTRUMENT OF SERVICE) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு செலவு பொது-1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வகையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை A படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வரவு செலவு பொது 1) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு பொது நூலக இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021-22-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது 1/ கல்வி-II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பொது நூலக இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.44278 / கல்வி – II / 2021, நாள் 23.10.2021-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.654 (அறுநூற்று ஐம்பத்து நான்கு)

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை - 2.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

**நகல்:-**

அரசு முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
நிதித் (கல்வி-II) (வரவு செலவு பொது-I / வரவு செலவு பொது-II) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை - 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
பள்ளிக்கல்வித் (வரவு செலவு) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. மாலதி 25/10/21
பிரிவு அலுவலர்.